**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 25 மே 2017

Good Food, Good Life

***'வருடத்தின் மிகச் சிறந்த கனிஷ்ட விளையாட்டு ஊக்குவிப்பிற்கான' விருதை மைலோ வென்றுள்ளது***

*2016 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் நிகழ்வில் தங்கத்தை வென்றுள்ளது*

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பிரபலமான பான வகை உற்பத்தியும், ஊட்டச்சத்து ஆற்றல் தரும் மாபெரும் வர்த்தகநாமமுமான மைலோ, கடந்த மூன்று தசாப்த காலமாக அடிமட்டத்தில் பாடசாலை விளையாட்டுக்களுடன் இணைந்து செயற்பட்டு வந்துள்ளதுடன், எங்கும் சிறுவர்களை ஊக்குவித்து, உத்வேகமளித்து வந்துள்ளது. அந்த வகையில், அண்மையில் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் நிகழ்வில், 'வருடத்தின் மிகச் சிறந்த கனிஷ்ட விளையாட்டு ஊக்குவிப்பிற்கான' விருதை வென்றுள்ளது. இப்பிரிவில் அதியுயர் அங்கீகாரமான தங்க விருதை அது வென்றுள்ளது.

சிறுவர்கள் உடற்பயிற்சி நிறைந்த மற்றும் ஆரோக்கியமான வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஊட்டச்சத்து, ஆற்றல், ஆதரவு மற்றும் வாய்ப்புக்களை வழங்குவதில் இந்த வர்த்தகநாமம் மிக நீண்ட காலமாக முன்னெடுத்து வருகின்ற வலுவான முயற்சிகளுக்கு தலைவணங்கும் வகையில் இந்த இனங்காணல் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. உள்நாட்டு சமூகத்தின் மத்தியில் மைலோ ஏற்படுத்தியுள்ள நல்விளைவுகள், சிறந்த ஊட்டச்சத்து மற்றும் உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கைமுறையை ஊக்குவிப்பதில் ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில் அது கட்டியெழுப்பியுள்ள நம்பிக்கை மற்றும் சம்பாதித்துள்ள நன்மதிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவும் இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் கூறுகையில், *"உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கை முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு சிறுவர்களை வலுப்படுத்துவதில், சுமார் 30 ஆண்டுகளாக மைலோ வர்த்தகநாமம் மனப்பூர்வமாகச் செயற்பட்டு வந்துள்ளது. நாடெங்கிலும் திறமைமிக்க விளையாட்டு வீரர்களின் "வெற்றி பெறும் உற்சாக உணர்வை ஊக்குவித்து" வந்துள்ள நாம், ஒட்டுமொத்தமாக சிறுவர்கள் மத்தியில் உடற்பயிற்சிகள் மற்றும் நலனை ஊக்குவிப்பதில் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளோம். எமது முயற்சிகளுக்கு இத்தகைய ஒரு கௌரவம் கிடைக்கப்பெற்றுள்ளமை தொடர்பில் நாம் உண்மையில் ஆத்ம திருப்தியுடன், அதனை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகின்றோம். எதிர்கால தலைமுறைகளின் அபிலாஷைகளை வளப்படுத்துவதில் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளோம்,"* என்று குறிப்பிட்டார்.

ஆரோக்கியம், நலன், ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவம் போன்ற பண்புகளை இள வயதினர் மத்தியில் விளையாட்டின் மூலமாக வளர்க்கும் முயற்சியில் மைலோ ஈடுபட்டுள்ளது. நீச்சல், கிரிக்கட், வலைப்பந்தாட்டம், தடகள விளையாட்டுக்கள் மற்றும் ரக்பி போன்ற தேசிய விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலமாக, ஒவ்வொரு ஆண்டிலும் 1.6 மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதை அது ஊக்குவித்து வந்துள்ளதுடன், அதன் மூலமாக இலங்கையில் ஆரோக்கியமான ஒரு எதிர்காலத் தலைமுறையை உருவாக்குவதற்குப் பங்களித்து வருகின்றது. வளர்ந்துவரும் பல விளையாட்டு வீரர்கள் தமது துறைகளில் வளர்ச்சி காண்பதற்கும் அது உதவியுள்ளது.

பாடசாலை விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்யும் மைலோவின் முயற்சிகள் ஒன்றுபட்ட உழைப்பின் பலனாகும். விளையாட்டு அமைச்சு, கல்வி அமைச்சு, பாடசாலை விளையாட்டுச் சபைகள் மற்றும் பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள் போன்ற உத்தியோகபூர்வ அதிகார சபைகளுடனும், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களுடனும் பங்காளராக இணைந்தே மைலோ தனது முயற்சிகளை முன்னெடுத்து வந்துள்ளது. இந்த விளையாட்டு நிகழ்வுகளைப்

பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து, தனிப்பட்ட மற்றும் அணியின் சாதனைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதில் உள்நாட்டு ஊடகங்களும் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் நாட்டில் தேசிய விளையாட்டுக்களுக்கான விருதுகள் நிகழ்வின் சிகரமாக உள்ளன. தேசிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், மற்றும் அனுசரனையாளர்கள், ஊடக நிறுவனங்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விளையாட்டுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் போன்று விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் தரப்பினர் ஆகியோருக்கான ஒரு உச்ச இனங்காணல் அங்கீகாரமாக இவ்விருதுகள் அமைந்துள்ளன.

தேசிய மட்டத்தில் பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கு வழங்கும் நிதிசார் பங்களிப்புக்கள், மற்றும் அனுசரனையளிக்கப்படுகின்ற நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களின் சிறப்பான பெறுபேறுகள் அடங்கலாக பல்வேறு அம்சங்களின் அடிப்படையிலேயே 'வருடத்தின் மிகச் சிறந்த கனிஷ்ட விளையாட்டு ஊக்குவிப்பிற்கான' விருது தெரிவு செய்யப்படுகின்றது.